முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை: திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 26ம் தேதி செவ்வாய்க்கிழமை
இடைநிலை மனு எண்.4/2025
இன்
அசல் வழக்கு எண்.239/2019
-----

1) சத்யா
2) முத்துகாமாட்சி ... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/ எதிர்/

தவமணி ... எதிர்மனுதாரர்/வாதி

இறுதியாக, இம்மனு 19.08.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுந்தர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும் இருந்த நிலையில், இருதரப்பு தரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## <u>உத்தரவு</u>

மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில், வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளால், வா.சா.1ஐ recall செய்ய உத்திரவிட வேண்டி கட்டளை 18 விதி 17ன் கீழ் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனு சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.**

1.1) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் வா.சா.1ஐ recall செய்ய வேண்டி இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஏற்கனவே தன்னை குறுக்கு விசாரணை செய்து முடித்து விட்டதாகவும், மேற்படி மனு வழக்கின் கோப்புகளை தாமதப்படுத்த வேண்டும் என்பதற்காக மட்டுமே தாக்கல் செய்யப்பட்ட ஒன்று என்றும், எனவே இம்மனுவை அனுமதிக்கக்கூடாது என்றும் ஆட்சேபனை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.3) இருதரப்பு மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>2) தீர்வு</u>**

2.1) இம்மனுவானது வா.சா.1ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 கடந்த 12.08.2024ம் தேதியில் முதல்விசாரணை தாக்கல் செய்து, அதன் பின்னர் 06.12.2024ம் தேதியில் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், மீண்டும் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) மேற்படி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஏற்கனவே தன்னை குறுக்கு விசாரணை செய்து முடித்து விட்டதாகவும், மேற்படி மனு வழக்கின் கோப்புகளை தாமதப்படுத்த வேண்டும் என்பதற்காக மட்டுமே தாக்கல் செய்யப்பட்ட ஒன்று என்றும் கூறி எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

2.3) எனவே, அசல் மேற்படி வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொள்ளும்போது, வா.சா.1ஐ recall செய்து, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வது இருதரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கானதாகவும், சட்டப்படியானது மற்றும் நீதியின் நலன்பொருட்டு உகந்தது என்பதை கருத்தில் கொண்டும், மேற்படி வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்வதால் அசல் வழக்கில் தரப்பினர்களுக்கு இடையேயுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒரு காரணியாக அமையுமே தவிர, வழக்கு தரப்பினர்கள் யாருக்கும் சட்டத்திற்கு புறம்பான சாதக பாதகம் ஏற்படபோவதில்லை என்பதை கருத்தில்கொண்டு, வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்யும்விதமாக PW-1ஐ Recall செய்து உத்தரவிடுவது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** இம்மனுவானது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.300/-செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 26.08.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.26 17:58:29 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

**இணைப்பு:-**

**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.26 17:58:38 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.4/2025
இன்
அசல் வழக்கு எண்.239/2019
செவ்வை உத்தரவு
நாள் : 26.08.2025